<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 497/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 17.06.2025.**

| | |
|---|---|
| **Name : சுமதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 30.09.2022ம் தேதி இரவு நானும் என் கணவரும் மகனும் மூவரும் சாப்பிட்டுவிட்டு வீட்டில் தனித்தனியாக தூங்கி கொண்டிருந்தோம். வீடு பாதுகாப்பாக இருந்ததால் கதவிற்கு தாழ்ப்பாள் போடவில்லை. அன்றையதினம் இரவு 1 மணியளவில் யாரோ எனது கழுத்திலிருந்த தங்க செயினை பிடித்தது போல் தெரிந்தது. பிறகு நான் எழுந்து பார்த்த போது மூன்று பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கட்டிலை சுற்றி நின்றிருந்தார்கள்.

2) அதில் ஒருவர் கழுத்திலிருந்த 2 3/4 பவுன் தங்க செயினை பறித்தார். பிறகு நான் பறிப்பதை தடுப்பதற்காக முயற்சி செய்த போது சத்தம் போட்டேன். ஆனாலும் அந்த நபர் செயினை பறித்துக் கொண்டு வெளியே ஓடிவிட்டார். நான் பிடித்துக் கொண்டதால் எனது கையில் அறுந்த நிலையில் 3/4பவுன் செயின் கையிலேயே இருந்தது. எனது கணவர் மற்றும் மகன் ஓடி வந்த போது அவர்களை துரத்திய போது அவர்கள் ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையம் நானும் என் மகன், என் கணவரும் சென்று புகார் மனு கொடுத்தோம்.

புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் சம்பவத்தன்று செயினை பறித்து சென்றதாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.நடுவிலுள்ள அரிபாபு என்பவர் தான் என்னிடம் செயினை பறித்த நபர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

3) பிறகு சிறிது நாட்கள் கழித்து செயின் கிடைத்துவிட்டதாக காவல் துறையில் என்னை அழைத்ததற்கு நான் பறித்து சென்ற செயினை அடையாளம் காட்டினேன். பிறகு நீதிமன்றத்தில் நகை தாக்கல் செய்ததாக தெரிந்து கொண்டு மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் செயினை பெற்றுச் சென்றோம். என்னிம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகை நான் பெற்றுச் சென்றது என்று திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். தங்க செயின் **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 497/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 17.06.2025.**

| Name : வடிவேல் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மின்சாரம் சம்மந்தமாக வேலை செய்கிறேன். அ.சா.1 என் மனைவி. கடந்த 30.09.2022ம் தேதி இரவு நானும் என் மனைவியும், மகனும் மூவரும் சாப்பிட்டுவிட்டு வீட்டில் தனித்தனியாக தூங்கி கொண்டிருந்தோம். அன்று நாங்கள் தூங்கிக்கொண்டிருந்த போது எனது மனைவி சத்தம் போடும் சத்தம் கேட்டது. அப்போது இரவு 1 மணியிருக்கும். எனது மனைவி சுற்றி இருந்து கதவை திறந்து கொண்டு வெளியே ஓடினார்கள். அவர்களை நான் பார்த்தேன். பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் எழுந்து கொண்டார்கள். எனது மகனும் எழுந்து கொண்டு என்னுடன் வந்துவிட்டார்.

2) எனது மனைவி கழுத்திலிருந்த 2 3/4 பவுன் தங்க செயினை பறித்த போது அவள் பிடித்துக் கொண்டதால் செயின் பிஞ்சு போய் முக்கால் பவுன் அவர் கையில் இருந்தது. அவர்கள் ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் கொடுத்தார். ஆஜரிலுள்ள எதிரிகள் ஓடும் போது நான் பார்த்தேன். வெளியே வெளிச்சத்தில் அவர்களுடைய பின்பக்கத்தை தான் பார்த்தேன். சாட்சி ஆஜரிலுள்ள எதிரிகள் போல தான் ஓடிய நபர்களும் இருந்தார்கள் என்று திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். ஆனால்

என் மனைவி அவர்களை நன்கு பார்த்ததாக சொன்னார். பிறகு சிறிது நாட்கள் கழித்து செயின் கிடைத்துவிட்டதாக காவல் துறையில் என்னை அழைத்ததற்கு என் மனைவி பறித்து சென்ற செயினை அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 497/2023**

**Prosecution witness : அ.சா.3** **Date : 17.06.2025.**

| | |
|---|---|
| **Name : நவீன்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மின்சாரம் சம்மந்தமாக வேலை செய்கிறேன். அ.சா.1 என் தாயார். கடந்த 30.09.2022ம் தேதி இரவு நானும் என் பெற்றோர்கள் வீட்டில் தூங்கி கொண்டிருந்தோம். அப்போது இரவு 1 மணியளவில் எனது தாயார் மூன்று நபர்கள் என் தாயார் கழுத்திலிருந்த தங்க செயினை பறித்துச் சென்றார்கள். என் தாயார் சத்தம் போட்ட போது எழுந்து வந்து பார்த்த போது மூன்று நபர்கள் சென்ற போது துரத்தினேன். ஆனால் அவர்களை பிடிக்க முடியவில்லை.

2) இருட்டில் சென்று மறைந்துவிட்டார்கள். பிறகு என் தாயார் கழுத்திலிருந்து செயினை பறித்த போது பாதி செயின் பிடுங்கிக் கொண்டதாகவும், மீதி செயின் என் தாயாரிடம் இருந்ததாக தெரிந்து கொண்டேன். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் பறித்தார்கள் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது. இருட்டில் எனக்கு பார்க்க இயலவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். பிறகு திருடிச் சென்ற நபர்களை பிடித்ததாகவும், எனக்கு போலீசார் மூலமாக தகவல் கிடைத்தது. பிறகு நீதிமன்றத்தில் எனது தாயார் இடைக்கால பொறுப்பில் நகையை பெற்றுச் சென்றார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.